**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
------

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUVOTTIYUR**

| | | |
|---|---|---|
| **Calendar** | **:** | |
| **Miscellaneous** | **:** | |
| **Preliminary Register** | **:** | **Case No. CC/213/2024** |
| **Sessions** | **:** | |
| **Deposition of witness for** | **:** | **Prosecution PW 3 / LW 3** |
| **Name** | **:** | திரு. N. தங்கராஜன் |
| **Father’s/Husband's Name** | **:** | திரு. S. நாராயணசாமி |
| **Village** | | |
| **Taluk** | **..** | |
| **Caste** | **..** | |
| **Calling** | **..** | |
| **Religion** | **..** | |
| **Age** | **..** | **76** |

**Date: 28/11/2025**

**(Solemnly affirmed before this court under act X of 1969)**

**எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜர் ஆகவில்லை. வழக்கறிஞரால் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை தொடர்ச்சி**

20. கடந்த 22.04.2023 தேதிய அழைப்பாணையின் படி 24.04.2023ல் பெண்கள் ஆணையத்தில் கொடுக்கப்பட்ட மனு சம்பந்தமாக விசாரணைக்கு ஆஜராக அழைப்பாணை அனுப்பப்பட்டது.

21. கடந்த 04.05.2023 தேதிய அழைப்பாணையின் படி 08.05.2023ல் DCP செங்குன்றம் அவர்களிடமிருந்து வந்த மனு சம்பந்தமாக விசாரணைக்கு ஆஜராக அழைப்பானை அனுப்பப்பட்டது.

22. கடந்த 27.05.2023 தேதிய அழைப்பாணையின் படி 29.05.2023ல் DCP செங்குன்றம் அவர்களிடமிருந்து வந்த மனு சம்பந்தமாக விசாரணைக்கு ஆஜராக அழைப்பானை அனுப்பப்பட்டது.

23. 20, 21, 22 தேதிய அழைப்பாணைகளுக்கும் மற்றும் மாநில பெண்கள் ஆணையத்தினரால் அனுப்பப்பட்ட அழைப்பாணைகளுக்கு யாரும் ஆஜராகவில்லை. புகார்தாரர் ஆகிய எனது மகள் மட்டும் மேற்கண்ட தேதிகளில் ஆஜரான போது காவல் நிலையத்தில் எவ்வித விசாரணை நடத்தாமலும் மேலும் நான் வந்ததற்குறிய ஆதார கையெழுத்து பெறாமலும் எனது மகளை இரவு 09.00 மணி வரை காக்கவைத்து திரும்பி அனுப்பியுள்ளனர் என்பதுடன். மேற்கண்ட தகவல்களை குற்றம் சாட்டப்பட்ட நபர்களுக்கு தொலைபேசியின் மூலம் தகவல் அளித்தும் உள்ளனர். குற்றம் சாட்டப்பட்டவர்கள் ஒரு VIP போன்றும் பாதிக்கப்பட்ட எனது மகள் ஒரு மூன்றாம் தர குற்றவாளியைப்போல் M5 காவல் நிலையத்தினர் நடத்தியுள்ளனர்.

24. DGP சென்னை அவர்களிடம் ஏற்கனவே நேரில் அளிக்கப்பட்ட மூன்று மனுக்கள் சம்பந்தமாக எந்த ஒரு விசாரணையும் இல்லாமலும் மேலும் மேற்கண்ட மனு தொடர்பாக எந்தவிதமான தகவலுரம் அளிக்காத நிலையில் எனது மகளால் PIO/AIG of Police , State H.Q சென்னை அவர்களுக்கு தகவல் அறியும் உரிமை சட்டப்படி மனு அளிக்கப்பட்டு விபரம் கேட்கப்பட்ட போது மேற்படி எனது

மனுவானது உரியவழியாக COP ஆவடி மூலம் DCP செங்குன்றம் அவர்களுக்கு உரிய தகவல் அளிக்க அறிவுறுத்தப்பட்ட நகலின் பிரதி எனது மகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

25. தமிழக அரசு தலைமை செயலாளருக்கு எனது மகளால் பிரதமமந்திரி அவர்களுக்கு அனுப்பப்பட்ட மனு மற்றும் மேல் முறையீட்டு மனு தொடர்பாக எண்ணூர் குற்றப்பிரிவு காவல் துறை ஆய்வாளரும் மற்றும் ACP எண்ணூர் அவர்களும் முறையே 03.06.2024 மற்றும் 26.08.2024 உண்மைக்கு புறம்பான வகையில் குற்றம் சாட்டப்பட்டவர்களை காப்பாற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் செயல்பட்டுள்ளனர். மேற்படி மனுவும் உரிய வழியாக COP ஆவடி மூலம் DCP செங்குன்றம் அவர்களுக்கு உரிய தகவல் அளிக்க அறிவுறுத்தப்பட்ட நகலின் பிரதி எனது மகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

26. 03.06.2024ல் எண்ணூர் குற்றப்பிரிவு ஆய்வாளர் மேற்படி முதல் தகவல் அறிக்கை எண்ணை குறிப்பிட்டு நடவடிக்கை உள்ளதாக தெரிவித்து குற்றம் சாட்டப்பட்ட 7 நபர்களில் 2 நபர்களின் பெயரை மட்டும் குறிப்பிட்டு ஒருங்கினைக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் அனைத்தையும் மறைத்து பண மோசடி தொடர்பாக உள்ள ரூபாய் 70 லட்சம் என்பதை சுமார் 40 லட்சம் என்று மாற்றி தகவலை அனுப்பி கோப்பை முடித்துள்ளார்.

27. 26.08.2024ல் ACP எண்ணூர் தனது அறிக்கையில் எனது மருமகன் மனநிலை சரியில்லாதவர் என்றும் உடல் நிலை பாதிக்கப்பட்டவர் என்றும் தவறான அறிக்கையை அனுப்பியுள்ளார். எதன் அடிப்படையில் எந்த மருத்துவர் சான்றிதழின் அடிப்படையில்

மனநிலை சரியில்லாதவர் என்று ACP எண்ணூர் முடிவு செய்துள்ளார் என்ற விபரம் அறியப்படவேண்டும் என்பதுடன் குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் யாரும் விசாரணைக்கு ஆஜராகாத நிலையில் குற்றம் சாட்டப்பட்ட நபர்களை தப்பிக்கவைக்க வேண்டும் என்ற கெட்ட நோக்கத்திலும் மேலும் மனநிலை சரியில்லாதவர் என்று கூறப்பட்டால். நீதிமன்றத்தில் மேற்படி வழக்கின் தன்மையை மாற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் மேற்படி தகவல் அனுப்பப்பட்டுள்ளது. மேலும் எனது மருமகன் குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் பராமரிப்பில் இருந்து வந்த போது அவரது பராமரிப்பிற்க்க வேண்டி மேற்படி தொகை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

28. இனம் 25ன் தொடர்பாக பாதிக்கப்பட்ட நபரான எனது மருமகன் S. கதிர்வேல் என்பவரால் தமிழக அரசு உள்துறை செயலாளருக்கு கடந்த 15.02.2023ல் அனுப்பப்பட்ட கடிதத்தில் A1 கார்த்திகேயன் என்பவர் தன்னை மாதம் ரூ. 500 வாடகைக்கு குடியமர்த்தி தினம் ஒன்றுக்கு சாப்பாட்டு செலவிற்காக ரூ. 10 வீதம் தந்துள்ளதாகவும். மற்றபடி தனது ஊதிய தொகை மற்றும் இதர வருமானங்கள் அனைத்தையும் அவரது மனைவியான எனது மகள் கண்டுபிடித்து சொன்னதின் பின்பு அவரது அனுமதியின் பெயரில் எனது மகளால் இழந்த பணத்தினை மீட்கவும் சொத்துக்களை கையகபடுத்தவும் வேண்டி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

29. ACP எண்ணூர் அவர்கள் இனம் 27ன் படி பிரதம மந்திரிக்கு அனுப்பப்பட்ட தவறான அறிக்கையில் “இது குடும்ப பிரச்சனை என்பதாலும் மேற்படி வழக்கு பதிவு செய்ய முகாந்திரம் இல்லை என்றும் வழக்கு கோப்பினை ஏற்கவில்லை”. என்றும் தவறான அறிக்கையை

அனுப்பியுள்ளார். காரணம் மேற்படி வழக்கானது கனம் கோர்ட்டார் அவர்களின் பரிசீலனையில் இருந்து செப்டம்பர் 24ல் CC/213/2024 ஆக கோப்புக்கு எடுக்கப்பட்ட தகவல் எனது மகளுக்கு தெரியப்படுத்தப்படாமல் ஜனவரி 2025ல் கனம் நடுவர் அவர்களால் பிப்ரவரி 2025ல் விசாரனைக்கு எடுக்கப்படவுள்ளது என்ற தகவல் அறிந்து அது முதல் எனது மகள் தொடர்ந்து விசாரணைக்கு ஆஜராகி வந்துள்ளார்.

30. இதில் கண்ட CC/213/2024 தொடர்பாக தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் படி தகவல் கோரியதற்கு ACP எண்ணூர் அவர்கள் வழங்காத நிலையில் மேல் முறையீடு DCP செங்குன்றம் அவர்களுக்கு அனுப்பப்பட்டது. மேற்படி மேல் முறையீட்டு அடிப்படையில் DCP செங்குன்றம் அவர்களால் அனுப்பப்பட்ட தகவலில் எந்தவிதமான எனது மகளது கோரிக்கை தொடர்பாக தகவல் அளிக்காமல் ஒரு மேம்போக்கான தகவலை திட்டமிட்டு அனுப்பியுள்ளார்.

31. இனம் 24, 25 மற்றும் 30ன் படி உள்ள DCP செங்குன்றம் அவர்களது அறிக்கை எந்த ஒரு விதத்திலும் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் படி ஏற்றுக்கொள்ளதக்கதல்ல. DCP தனது தகவலில் எண்ணூர் குற்றப்பிரிவு ஆய்வாளர் அவர்களது அறிக்கையின் படி தகவல் அளிக்கப்படுகிறது என்றும் எனது மகளுக்கு மொத்தம் உள்ள 6 எண்ணிக்கையான மனுக்களுக்கு உரிய தவறான தகவல் 5 எண்ணிக்கை அனைத்தும் Copy and Past செய்யப்பட்டு வரிசை எண். 56/2025, 57/2025, 58/2025, 77/2025 மற்றும் 82/2025 என எண்ணிட்டு ஒரே தகவல் Copy and Past செய்யப்பட்டு அனுப்பப்பட்டுள்ளது.

32. முதலாவதாக RTI மனுவிற்கு உரிய தகவல் அளிக்கவேண்டி அனுமதிக்கப்பட்ட நபர் ACP மட்டும் தான் ஆகும். ஆனால் DCPயின் தகவலில் எண்ணூர் குற்றப்பிரிவு ஆய்வாளர் தகவலின் அடிப்படையில் தகவல் அளிக்கப்பட்டதாக கூறப்பட்டது என்பது எந்த ஒரு வகையிலும் ஏற்றுக்கொள்ளதக்கதல்ல என்பதுடன் சட்டத்திற்கு அப்பாற்பட்ட செயலாகும். இதன் தொடர்பாக எனது மகள் DCP அவர்களது அலுவலகத்தில் சென்று சந்தித்து மேற்கண்ட தகவல் எவ்வாறு சரியானது என்று கேட்ட போது DCP அவர்கள் எனது மகளிடம் தனக்கு யாரிடமிருந்து வேண்டுமானாலும் தகவல் பெற்று அனுப்ப தனக்கு அதிகாரம் உள்ளது என்றும் இதனை கேள்வி கேட்க யாருக்கும் உரிமை இல்லை என்றும் கூறிய போது எனது மகள் இதன் தொடர்பாக மேல் முறையீடு செய்வேன் என்று கூறிய போது DCP அவர்கள் எனது மகளிடம் யாரிடம் வேண்டுமானாலும் மேல் முறையீடு செய்துகொள் அதனை எவ்வாறு முடிவுக்கு கொண்டு வருவது என்பது தனக்கு தெரியும் என்றும் எனது மகளால் எதுவும் செய்ய முடியாது என்றும் சவால் விடுவது போல் பேசி அலுவலகத்திலிருந் வெளியேற்றிவிட்டார். DCP அவர்களது தகவலானது DGP சென்னை அவர்களிடம் கொடுத்த மூன்று மனுக்கள் மற்றும் பிரதமர் அலுவலகத்திற்கு கொடுக்கப்பட்ட இரண்டு மனுக்கள் தொடர்பான தகவல்கள் தமிழக அரசு தலைமை செயலாளர் மூலம் தகவல் கேட்கப்பட்ட போது பிரதமர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்ட 03.06.2024 குற்றப்பிரிவு ஆய்வாளர் அறிக்கை மற்றும் 26.068.2024 ACP எண்ணூர் அவர்களால் அளிக்கப்பட்ட உண்மைக்கு மாறாக அனுப்பப்பட்ட அறிக்கைகள் எனது மகளுக்கு முறைப்படி சான்றிட்டு அனுப்பப்படாமல் மறைக்கப்பட்டும் உள்ளது.

33. PDJ திருவள்ளூர் அவர்களால் கடந்த 14.02.2024ல் Allegation என்னும் தலைப்பில் ஒரு கடிதமானது (எனது மகளால் எழுதப்பட்டது). திருவள்ளூர் மாவட்ட SP அவர்களுக்கு அனுப்பப்பட்டு எனது மகளுக்கு மேற்படி கடிதத்தின் நகல் பிரதி அனுப்பப்பட்டுள்ளது. நிர்வாக காரணங்களுக்காக மேற்படி கடிதமானது SP திருவள்ளூர் அவர்களால் கடந்த 21.03.2024ல் COP ஆவடி அவர்களுக்கு உரிய நடவடிக்கைகளுக்காக மாற்றம் செய்யப்பட்டுள்ளது. மேற்படி 21.03.2024 தேதியிட்ட SPகடிதத்தில் COP ஆவடி அவர்களுக்கு அனுப்பப்பட்டதின் பின்பு பல்வேறு திருத்தங்கள் கைப்பட எழுதப்பட்ட Side initial ல் தேதி மாற்றமும் உள்ளது. மேற்படி கடிதம் தொடர்பாக COP ஆவடி அவர்களது அலுவலகத்தில் சென்று கேட்ட போது அது போன்ற கடிதம் ஏதும் தங்களுக்கு கிடைக்கவில்லை என்றும் கூறி எனது மகளை அவர்களது அலுவலகத்திலிருந்து வெளியேற்றிவிட்டனர்.

34. எனது மகளால் சென்னை உயர் நீதிமன்ற தலைமை நீதிபதிக்கு கடந்த 29.09.2023ல் அனுப்பப்பட்ட கடிதமானது உரிய வழியாக திருவள்ளூர் மாவட்ட DLSA மனு எண் G 03872/2024 ஆக விசாரணைக்கு எடுக்கப்பட்டு 28.02.2024, 14.03.2024, 27.03.2024, 15.04.2024 மற்றும் 30.06.2024 விசாரணைக்கு அழைக்கப்பட்டு எந்த ஒரு விசாரணையும் நடத்தப்படாமலும், எதிர் மனுதாரர்கள் யாரும் ஆஜராகாமலும் இருந்த நிலையில் 15.04.2024ல் நடைபெற்ற விசாரணையின் போது எங்களது சக வழக்கறிஞர்கள் மேலேயே புகார் மனு அளித்துள்ளீர்கள். இதனை நாங்கள் 30.06.2024 அன்றைய விசாரணையில் முடித்து விடுவோம் என்றும் தகவல் அளித்த நிலையில் 30.06.2024ல் விசாரணைக்கு ஆஜராகாமல் உரிய மேலதிகாரிகளுக்கு தகவல் அளிக்கப்பட்டு விசாரணைக்கு ஆஜராகவில்லை.

35. கடந்த 26.03.2025ல் திருவொற்றியூர் நீதிமன்ற நடுவர் அவர்களுக்கு எழுதப்பட்ட கடிதமானது சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதிக்கு நகல் அனுப்பப்பட்டும். 23.03.2025ல் திருவொற்றியூர் நீதிமன்ற நடுவர் அவர்களிடம் எனது மகளால் நேரிடையாக தரப்பட்டது. மேற்படி கடிதமானது கடந்த 04.08.2025ல் திருவள்ளூர் மாவட்ட நீதிமன்றம் மூலம் திருவொற்றியூர் நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

36. எனது மருமகன் S.கதிர்வேல் என்பவலரால் மாநில உள்துறை செயலாளர் அவர்களுக்கு 15.02.2023ல் எழுதப்பட்ட கடிதம் மற்றும் COP ஆவடி அவர்களுக்கு 16.02.2023ல் எழுதப்பட்ட கடிதம் ஆகியவைகளில் நகல்கள் எனது மகளால் விசாரணை அதிகாரிகளான ACP மற்றும் குற்றப்பிரிவு ஆய்வாளரிடம் நேரில் கொடுக்கப்பட்டும் அவை அனைத்தும் மறைக்கப்பட்டுள்ளது

37. மேற்கண்ட காரணங்களின் அடிப்படையில் எனது மகளது புகார் மனு ஆனது பல்வேறு நபர்களுக்கு அனுப்பப்பட்டும் DCP செங்குன்றம், ACP எண்ணூர், குற்றப்பிரிவு ஆய்வாளர் , எண்ணூர் ஆகியோர்கள் மூலம் உரிய முறையில் நடவடிக்கை எடுக்கப்படாமல் திட்டமிட்டு மோசடியான வகையில் பிரதமர் அலுவலகத்திற்கு தவறான தகவல் அளித்து ஒருங்கிணைக்கப்பட்ட புகார் மனுவில் உள்ள இதற குற்றங்கள் அனைத்தையும் மறைத்து பண மோசடியை மட்டும் காண்பித்தும் குற்றம் சாட்டப்பட்ட பல நபர்களை விடுவித்து 2 நபர்கள் மீது மட்டும் CC/213/2024 ன் படி வழக்கினை முடிவுக்கு கொண்டு வந்து மற்ற

குற்றச்செயல்களையும், மற்றும் குற்றம் சாட்டப்பட்டவர்களை காப்பாற்ற வேண்டும் என்ற நோக்கத்திலும் மாநில உள்துறை செயலாளர் அவர்களுக்கு 15.02.2023ல் எழுதப்பட்ட கடிதம் மற்றும் COP ஆவடி அவர்களுக்கு 1+.02.2023ல் எழுதப்பட்ட கடிதம் ஆகியவைகளில் நகல்கள் எனது மகளால் விசாரணை அதிகாரிகளான ACP மற்றும் குற்றப்பிரிவு ஆய்வாளரிடம் நேரில் கொடுக்கப்பட்டும் அவை அனைத்தும் மறைக்கப்பட்டுள்ளது.

(போதிய நேரமின்மை காரணமாக வழக்கானது மறு தேதியிட்டு ஒத்திவைக்கப்படுகிறது).

K KARTHIK

Digitally signed by K KARTHIK
Date: 2025.11.28 17:48:31 +0530

நீதித்துறை நடுவர்,

திருவொற்றியூர்